ஆண்டின் மிக ஆரம்பத்திலேயே, ஜனவரி 3ம் திகதியிலேயே திருச்சபை வருடம்தோறும் யேசுவின் அதிபுனிதமான நாமத்தின் பெருவிழாவினைக் கொண்டாடுகிறது. ஒரு பெயருக்கு இத்தகைய விழா எதற்காக? ஏனெனில் பெயர்கள் முக்கியமானவை. அவை மிகவும் காத்திரமானவை. அவை ஒருவரின் ஆளுமையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதோடு பெயரிடப்பட்டவரை பிரசன்னப்படுத்துவவை.

வெறும் மனித மட்டத்தில், பெயர்கள் முக்கியம் பெறுபவை. ஒருவரின் பெயரை நாங்கள் அழைக்கும்போது அவர் பதிலளிக்கின்றார். நான் ஒரு ஒப்பந்தத்தில் எனது பெயரை கையொப்பமிடும்போது, நான் அதற்கு கட்டுப்பட்டவனாகின்றேன். என் பெயரை ஒரு காசோலையில் கையொப்பமிடும்போது எனது கணக்கிலிருந்து பணம் எடுக்கப்படுகின்றது.

எங்கள் ஆழமான அனுபவங்களின் இதயத்தில் பெயர்கள் உள்ளன. நாம் திருமுழுக்கு பெறும்போது குருவானவர் "(பெயர்), பிதா சுதன் பிரிசுத்த ஆவியின் பெயரால் உனக்குத் திருமுழுக்கு அளிக்கின்றேன்." எனக் கூறுவார். ஒரு ஆணும் ஒரு பெண்ணும் திருமண அருட்சாதனத்தில் இணையும்போது ஒவ்வொருவரும் கூறுவது "நான் (பெயர்) உன்னை என் (கணவன் அல்லது மனைவி) ஆக ஏற்றுக்கொள்கிறேன்." "ஒருவர் குருவாகத் திருநிலைப்படுத்தப்படும் போது அவர் பெயர் அழைக்கப்படுகின்றது. அவர் பதிலுரை தந்து தன்னைக் கையளிக்கின்றார். மனித நிலையில் உண்மையானவை இறைவனின்முன் மேலும் காத்திரமானதாகின்றது. பழைய ஏற்பாட்டில் ஒரு முக்கியமான நிகழ்வு எரிகிற புதரில் மோசேஸ் பெற்ற இறை அனுபவம். (யாத்திராகமம் 3). இறைவன் மோசேயிடம் தனது தெய்வீகப் பெயரை வெளிப்படுத்தினார். அது இறைவனை அங்கு பிரசன்னமாக்கியது. 10 கட்டளைகளில் இரண்டாவது இறைவனுடைய நாமத்தை வீணாக உச்சரிக்காதே எனக் கற்பிக்கின்றது. பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே, எனும் வேண்டுதலில் "பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக" என நாம் மன்றாடுகின்றோம். "உம்முடைய நாமம் என்றும் புனிதமானதே" என கூறும்போது "நீர் என்றும் பரிசுத்தரே" என உண்மையில் நாம் சொல்கிறோம். பெயர் ஒருவரைப் பிரசன்னமாக்குகின்றது. இது மிகவும் குறிப்பிடத்தக்கது. "பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே" என்றும் நாம் செபிக்க ஆரம்பிக்கும்போது இந்த உண்மையை அங்கீகரிக்கின்றோம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசு எங்கள் இறைவன், அவர் எங்கள் ஆண்டவர், அவர் எங்களோடு இருப்பவர் என்று வழிபடுகின்றோம். "கிறிஸ்து" என்பது

இயேசுவின் குடும்பப் பெயர் அல்ல, அது ஒரு தலைப்பு. “கிறிஸ்து” – மெசியா, அபிஷேகம் **செய்யப்பட்டவர்**. இயேசுவே கிறிஸ்து என்றும் ஆண்டவர் என்றும் நாங்கள் உறுதியோடு அறிக்கையிடுகின்றோம். ஆண்டின் முடிவில் கிறிஸ்து அரசர் என்ற விசேட பெருவிழாவைக்கூட நாம் கொண்டாகின்றோம். “கிறிஸ்து” இயேசுவின் மகத்துவத்தை வெளிப்படுத்தும் ஒரு தலைப்பு.

இன்றைய உலகில் மிகவும் துன்புறுத்தப்படுகின்றவர்கள் கிறிஸ்தவர்கள். எங்கள் கிறிஸ்து சகோதர சகோதரிகளுள் அநேகர் கொல்லப்படுகிறார்கள். சிறையில் அடைக்கப்படுகிறார்கள் அல்லது நாடு கடத்தப்படுகிறார்கள். இவர்கள் தங்கள் வாழ்வின் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவிற்கு விசுவாசம் உள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்பதற்காக இவர்களது தேவாலயங்களையும் வீடுகளையும் அழிக்கிறார்கள். வேதசாட்சிகளின் இரத்தமே திருச்சபையின் விதை ஆகும். இயேசுவின் மீது விசுவாசம் வைத்திருந்தார் என்பதற்காக 1927ல் உன்னத குருவான மிகுவேல் புரோ மெக்ஸிகோவில் தேவசாட்சியாகக் கொல்லப்பட்டார். “கிறிஸ்து அரசர் என்றும் வாழ்க” என்று கூக்குரலிட்டபடி துப்பாக்கிதாரிகளின் குண்டுகளைத் தைரியமாக எதிர்கொண்டு மரணித்த அவரது புகைப்படங்கள் உள்ளன. தந்தை புரோ இயேசு சபையின் ஒரு துறவியாவார். அச்சபையின் சின்னம் “IHS” கிரேக்க மொழியில் “இயேசுவின் புனித பெயரின் முதல் மூன்று எழுத்துகள். ஆனால் எல்லா கிறிஸ்தவர்களும் இயேசுவில் ஒரு சமுதாயத்தை உருவாக்கியுள்ளோம். சுவாமியார் ப்ரோவைப் போலவே நாமும் அவருக்காக இறக்கத் தயாராக இருக்க வேண்டும் என்பதுமட்டுமல்ல அதற்கும் மேலாக நாம் செய்யும் எல்லாவற்றிலும் அவருடைய அன்பைக் காட்டுவதன் மூலம் அவருக்கு வாழக் கடமைப்பட்டிருக்கிறோம்.

புனிதமான “கிறிஸ்து” என்ற திருப்பெயருக்காக நாம் இறப்பதற்கும், வாழ்வதற்கும் தயார் எனின், இயேசுவின் பரிசுத்த பெயர் அதையும் விட மேலானது என எண்ணவேண்டும். இப்பெயரின் கருத்து ஆண்டவர் எங்களை இரட்சிக்கிறார் எமது பாவங்களிலிருந்து எம்மை விடுவிக்கின்றார் என்பதாகும். ஆரம்ப காலங்களில் அவருடைய சீஷர்கள் “கிறிஸ்து” என்ற தலைப்பை எளிமையாக பயன்படுத்தத் தயாராக இருந்தபோதிலும் அவருடைய பரிசுத்த நாமத்தை மிகுந்த பயபக்தியுடன் உபயோகித்தார்கள். பிலிப்பியர் 2: 6-11 ஐ வாசிக்குமாறு உங்களைக் கேட்கின்றேன். இந்த ஆரம்பகால கிறிஸ்தவப் பாடலில் புனித திரித்துவத்தின் இரண்டாவது ஆளாகிய இயேசு நம் மத்தியில் வந்து எமது துன்பங்களில்

சிலுவைமரணம் ஈறாகக் கலந்தார். “கடவுளும் அவரை மிகவே உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார் ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர் கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர். தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக “இயேசு கிறிஸ்து ஆண்டவர்” என எல்லா நாவுமே அறிக்கையிடும்.

இயேசுவின் பரிசுத்த நாமம் எமது இரட்சகரையும் எமது வாழ்வின் ஆண்டவரையும் பிரதிபலித்து எமக்கு அவரை பிரசன்னமாக்குகின்றது. அவருடைய நாமத்தை நாம் கனம்பண்ணும்போது அவரை மகிமைப்படுத்துகிறோம். நாம் அவருடைய பெயரை அவமதிக்கும் போது, நாம் அவரையே அவமதிக்கிறோம்.

**பின்வருவன இந்த உண்மை பற்றிய சில நடைமுறை விளைவுகள்:**

1. செபத்தில் அவருடைய பெயரை நாம் பயபக்கியுடன் பயன்படுத்த வேண்டும். “இயேசுவின் செபத்தை தொடர்ந்து செபிக்க உங்கள் அனைவரையும் வாஞ்சயோடு கேட்டுக்கொள்கிறேன். ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவே உயிருள்ள கடவுளின் மகனே, பாவியாகிய என்மேல் இரக்கமாயிரும்.

2. அவரது புனித பெயர் அவரை பிரதிபலித்து அவரைப் பிரசன்னமாக்குவதை நிலைநிறுத்த நாம் சில அடையாளங்களை வழங்க வேண்டும். நான் சிறுவனாக இருந்தபோது இயேசுவின் பரிசுத்த நாமத்தை உச்சரிக்கிறபோது தலை குனிந்து வணங்கும்படி பரிந்துரைக்கப்பட்டது. இது ஒரு நல்ல வழக்கம், அத்துடன் நம் வாழ்விற்கு நாம் இறைவனுக்கு கடைமைப்பட்டவர்கள் என்பதையும் நினைவுபடுத்துவதற்கு இந்த வணக்கம் சிறிது உதவுகிறது. இந்த ஆராதனைக்கு நாம் இன்னும் ஆழமாக எம்மை உறுதி செய்ய முடியுமாயின் துன்பத்திலிருக்கும் உலகில் நம் செயல்களால் இயேசுவின் அன்பை இன்னும் திறம்பட எடுத்துக்காட்டலாம்.

3. நாம் மற்றவர்களை அவமதிக்கவோ அல்லது நளினம் செய்யவோ கூடாது. எமது இரட்சகரின் பரிசுத்த நாமத்தை நாம் எவ்வளவு பயபக்தியுடன் கையாள வேண்டும்? பெயர் பெயரைக் குறிப்பவரை பிரசன்னமாக்குகின்றது. எனவே இயேசுவின் சீடர்கள் அந்தப் புனித பெயரை சாபம் போடப் பயன்படுத்த மாட்டார்கள். அது சாதாரணமான, சிறுமையான, கேவலமானமுறையில் ஒருபோதும் பயன்படுத்தக் கூடாது. நம்முடைய விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளாத எங்களது நண்பர்களை நாம் கேட்டுக்கொள்கிறோம் அவர்களிடம் புனிதமானவற்றை நாம் மதிப்பதுபோல் இயேசுவின் பெயரையும் மதியுங்கள்.

பிலிப்பியர் 2: 6 -11 ஐ அடிப்படையாகக் கொண்ட அழகான பாடலின் மூலம் இதனை நான் மேற்கோள் காட்டுகிறேன்.

“ஆகவே இயேசுவின் பெயருக்கு அனைவரும் மண்டியிடுவர். எல்லா நாவுமே அவர் மாட்சிமை மிக்க அரசர் என அறிக்கையிடுவர். துவக்கத்திலிருந்தே இறைவனின்

வல்லமையுள்ள வார்த்தையான அவரை நாங்கள் ஆண்டவர் என நாம் அழைப்பதே தந்தையின் மகிமையாகும்.

ஒரு காலத்திலே தாழ்த்தப்பட்ட அவர், தாம் வந்துதித்த பாவிகளின் உதடுகளிலிருந்து அப்பெயரைப் பெற்றார். இறுதிவரை அதனை மாசின்றிக்காத்தார். இறுதியில் மரணத்தினூடாக அவர் அதை வெற்றியுடன் மீட்டார்.

உன் இருதயத்தில் அவரை மாட்சிமைப்படுத்து, பரிசுத்தமில்லாத யாவற்றையும், சத்தியமில்லாத அனைத்தையும் அவர் கீழ்ப்படுத்தக்கடவர். உங்கள் மீட்பர் அவரை சோதனை வேளையிலே தேடுங்கள். அவருடைய சித்தம் உங்களை வெளிச்சத்தோடும் வல்லமையோடும் புடைசூளட்டும்.

**Cardinal Thomas Collins**
**Archbishop of Toronto**